41

ஸ்ரீசெந்திலாண்டவன் துணை.



OFFICE ... MADRAS

தேவர்கள் சித்தியென் னும் மகிமையான மாந்திரிக

## சிவசுப்பிரமண்யர்

# ஷடாக்ஷரமாலை

மந்திர, யந்திர, பூஜாவிதியுடன்
ஸ்ரீ சுப்பிரமண்யர் அகஸ்தியருக்கு உபதேசித்தது

சென்னை, முராஹரி பிரெஸ்ஸில்
பிரசுரிக்கப்பட்டது.

இதன் விலை) 1928 (அணா-4.

(ரிஜிஸ்டர் காபிரைட்)

Q26:417
N28
148381

உ

ஸ்ரீசெந்திலாண்டவன் துணை.

---

தேவர்கள் சித்தியென்னும்
ஸ்ரீ சுப்பிரமண்யர் அகஸ்தியருக்கு உபதேசித்த
மலையாள மாந்திரீக

# சிவசுப்பிரமண்யர்

# ஷடாக்ஷாமாலை.

மந்திர, யந்திர, பூஜாவிதியுடன்

எட்டுப்பிரதியில் மூலபாடமாயிருந்ததை கள்ளிக்கோட்டை பிரம்மஸ்ரீ
நாராயண சிவபூஜை நம்பூரி அவர்கள்
யந்திரத்துடன் தியானித்து சித்திபெற்றிருந்ததை
ஷை யார் சிஷ்யரான திருவனந்தபுரம்
சைவ-கிருஷ்ணசாமி பிள்ளைக்கு உபதேசித்திருந்ததை
ஷை யார் குமாரர்
ஸ்ரீ சத்தி ஷண்முக வீக்ஷண்ய கடாக்ஷ
வேலாயுத சுவாமிகளால்
இத்தேசவாசிகளனைவர்களின் வேண்டுகோளிற்கிணங்கி
பரோபகாரார்த்தமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு
பிரசுரிக்கப்பட்டது.

இதன் விலை] சென்னை. [அணா-4.

(ரிஜிஸ்டர் காபிரைட்)

1928௵

"முராஹரி பிரெஸ்"

நெ-20. நம்மாள்வார் முதல்சந்து, மதராஸ்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு,

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

இப்புத்தகத்தை 1867-ம் வருஷத்திய 25-வது ஆக்ட் 20 வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் கனம்பொருந்திய கவர்ன்மெண்டில் (ரிஜிஸ்டர் காப்பிரைட்) அடியில் கையொப்ப மிட்டிருக்கும் என்னால் செய்யப்பட்டிருப்பதால் இதைவேறே ஒருவரும் அச்சிடலாகாது மீறி அச்சிட்டால் யான் கோரும் நஷ்டத்திற்கு உத்திரவாதியாவார்களென்பதைக் கண்டிப்பாக அறியவும்.

இப்படிக்கு,

டி. செங்கல்வராய நாயுடு,

நெ-20, நம்மாள்வார் முதல் சந்து,

சென்னை.

சுப்பிரமணியக்கடவுள் துணை.



# திருப்புகழ்.

மலடி வயற்றின் மகன்போல என்ற வர்ணமெட்டு.

சரஹண பவகுக ஷண்முகனே—சிவ
சாம்பவி யருள்குக கன்னியனே
தரணியி லெந்தனைக் காத்தருள்வாய்—யருள் முருகோனே
கந்தா கடம்பா முருகையா—புகழ்
கதிர் காமத்தின் சுப்பையா
வந்தா தரிப்பா யென்னையா—உனை பணிந்தேனே
வறுமைபிணி துய ரகற்றிடுவாய்
வள்ளி தெய்வானை மணவாளா
தருண முன்னருள் பெறவந்தேனே துணைபுரிவாயே
சிவ னடியார்க்கருள் புரிவோனே
சிந்தனை செய்தே னுனையானே
தவசிகள் புகழும் சீமானே—எனை காப்பாயே
திருத்தணி தனில் வாழ்வோனே
திவ்ய ருத்திராக்ஷ மணிவோனே
வருவா யென்றனை—திரு முருகோனே.

உ

வேலுமயிலுந் துணை.

# சத்ரு சங்கார வேற் பதிகம்.

## காப்பு

சண்முகக் கடவுள் போற்றி
சரவணத் துதித்தோய் போற்றி
கண்மணி முருகா போற்றி
கார்த்திகை பாலா போற்றி
தண்மலர்க் கடப்ப மாலை
தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி
வேலவா போற்றி போற்றி.

## நூல்.

அப்பமுட னதிரசம் பொரிகடலை
துவரைவடை யமுதுசெய் யிபமுகவனும்
ஆதிகேசவ னிலட்சுமி திங்கடினகர
னயிராவதம் வாழ்கவே
முப்பத்து முக்கோடி வானவர்க ளிடர்தீர
முழுதுபொன் னுலகம் வாழ்க
மூவரொடு கருடர்கந் திருவர்கிம் புருடரும்
முதுமறைக் கிழவர் வாழ்க

செப்பரிய விந்திரன் றேவியபி ராணிதன்
திருமங்கலம் வாழ்கவே
சித்தவித் யாதரர் கின்னரர்கள் கணமான
தேவதைகள் முழுதும் வாழ்க
சப்தகலை விந்துக்கு மாதியா மதிரூப
சரஹணனை நம்பி னவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. 1

சித்திசுந் தரிகௌரி யம்பிகை க்ருபாநிதி
சிதம்பரி சுதந்தரி பர
சிற்பரி சுமங்கலி நிதம்பரி விடம்பரி
விலாசுத விலாச விமலி
கொத்துதிரி சூலிதிரி கோணத்தி ஷட்கோண
குமரிகங் காளி ருத்ரி
குலிசவோங் காரிரீங் காரியாங் காரிலூங்
காரிரீங் காரி யம்பா
முத்திகாந் தாமணி முக்குண துரந்தரி
மூவர்க்கு முதல்வி ஞான
முதுமறைக் கலைவாணி யற்புத புராதனி
மூவுலகு மான சோதி
சத்திசங் கரிநீலி கமலிபார் வதிதரும்
சரஹணனை நம்பினவர் மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. 2

சூரியுள முப்பத்து முக்கோடி தேவரும்
 முனிவரொடு மசுரர் கூடி
முழுமந்த்ர கிரிதன்னை மத்தாக வேசெய்து
 முற்கணத் தமுது பெறவே
கோரமுள வாசுகியி னுயிரம் பகுவாயில்
 கொப்பளித் திடுவி டங்கள்
கோளகையு மண்டங்க ளியாவையு மெரித்திடுங்
 கொடியவர வினைப் பிடித்து
வீரமுடன் வாயினுற் குத்தியுதி ரம்பரவ
 விருதாளிலே மிதித்து
விரித்துக் கொழுஞ்சிற கடித்தே யெடுத்துதறும்
 விதமான தோகை மயிலில்
சாரியாய் தினமேறி விளையாடி வருமுருக
 சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
 சத்ரு சங்கார வேலே. 3

உக்ரமுள தாருகன் சிங்கமா சூரனு
 முன்னுதற் கரிய சூரன்
உத்திகொளு மங்கிமுகன் பானுகோ பன்முதல்
 உத்தண்ட வசுரர் முடிகள்
நெக்குவிட கரிபுரவி தேர்கள்வெள் ளங்கோடி
 நெடியபா சங்கள் கோடி
நிறைபிலா வஸ்திரம் வெகுகோடிகள்
 குருதிநீரிற் சுழன் றலவவே

தொக்கு தொகு திதிதிதிமி டிண்டுடு
டகுகுடிகு துந்துமி தகுகுதி திகுதை
தோததிமி டங்குகுகு டிங்குகுகு சங்குகென
தொந்தக் கவந்த மாட
சக்ரமொடு, சத்திவிடு தணிகை சென்னியில்வாழுஞ்
சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே 4

அந்தியிற் பேயுச்சி யுறுமுனிக் காட்டேரி
அடங்காத பகலி ரிசியும்
அகோரகண் டங்கோர கண்டருண் யம்பில்லி
அஷ்ட மோகினி பூதமும்
சந்தியான வசுகுட்டி சாத்திவே தாளமுஞ்
சாகினியி டாகினிகளும்
சாமுண்டி பகவதி ரத்தகாட் டேரிமுதல்
சஞ்சரித் திடுமுனிகளும்
சிந்தைநொந் தலறிதிரு வெண்ணீறு காணவே
தீயிலிடு மெழுகு போல
தேகமெல் லாங்கருகி நீறாக வேநின்று
சென்னியிரு தணிகை மலையில்
சந்ததங் கலியாண சாயுச்ய பதமருளுஞ்
சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. 5

கண்டவிட பித்தமும் வெப்புதலை வலியிருமல்
காமாலை சூலை குஷ்டம்
கண்டமாலைத் தொடை வாழைவாய்ப் புற்றினொடு
கடினமாம் பெரு வியாதி
அண்டொணு தச்சுரஞ் சீதவா தச்சுரம்
ஆரூத பிளவை குன்மம்
அடங்காத விருபஃது மேகமுடனுலுல கத்திலெண்
ணுயிரம் பேர்
கொண்டதொரு நோய்களும் வேலென் றுரைத்திடக்
கோவென்ன வோல மிட்டு
குலவுதின கரன்முன மஞ்சுபோ னீங்கிடுங்
குருபரன் நீறணிந்து
சண்டமா ருதகால வுத்தண்ட கெம்பீர
சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக்!!குத்தியெதி ராடிவிடுஞ்
சத்ரு சங்கார வேலே. 6

மகமேரு வுதயகிரி யஸ்தகிரி யுஞ்சக்ர
வாளகிரி நிடத விந்தம்
மாவுக்ர தாரகச் சிம்மகிரி யத்திகிரி
மலைகளொடு மதன சுமவா
ஜெகமெடுத் திடுபுட்ப தந்தமயி ராவதம்
சீர்பூண்ட ரீசகுமுதம்
செப்பு சாருவபூம மஞ்சனம் சுப்பிரதீப
வாமன மாதிவா

சகிமகா பதுமனு னந்தகார்க் கோடகன்
சொற்சங்க பாலகுளிகன்
தூயதக் கன்பதும சேடனோ டாவெலாம்
துடித்துப் பதைத் ததிரவே
தகதகென நடனமிடு மயிலேறி விளையாடுஞ்
சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி
ராடிவிடுஞ் சத்ரு சங்காரவேலே. 7

திங்கள்பிர மாதியரு மிந்திராதி தேவருந்
தினகரரு முனிவரோடு
சித்ரபுத்திரர் மௌலி யகலமா
லிருபதஞ் சேவித்து நின்று தொழவும்
மங்கைதிரு வாணியு மயிராணி யொடு சத்த
மாதரிரு தாள் பணியவும்
மகதேவர் செவிகூற பிரணவ முரைத்திட
மலர்ந்தசெவ் வாய்களாறும்
கொங்கைகளை பம்புழுகு சவ்வாது மணிவள்ளி
குமரி தெய்வானை யுடனே
கோதண்டபாணியும் நான்முக னுமேபுகழ்
குலவுதிரு தணிகைமலை வாழ்
சங்குசக் கரமணியும் பங்கயக்
கரகுமர சரஹணனை நம்பினவர் மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி
ராடிவிடுஞ் சத்ரு சங்கார வேலே. 8

மண்டலம் பதினாலு லோகமு மசைந்திட
    வாரிதியொ ரேழும் வறள
வலியவ சுரர் முடிகள் பொடிபடக் கிரவுஞ்ச
    மாரி யெழ தூளியாகக்
கொண்டனிற மெனு மசுர ரண்டங்க
    ளெங்குமே கூட்டமிட்டேக வன்னோர்
குடல்கைகா லுடன் மூளை தலைகள் வெவ்வேறாகக்
    குத்திப் பிளந் தெறிந்து
அண்டர்பணி கதிர்காமம் பழநிசுப்
    பிரமணிய மாவினன் குடியோகம்
அருணா சலங்கைலை தணிகைமலை
    மீதிலுறை அறுமுகப் பரம குருவாம்
சண்டமா ருதகால சம்மார
    வதிவீர சரஹணனை நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி
    ராடிவிடுஞ் சத்ரு சங்கார வேலே 9

மச்சங் குதித்துநவ மணிதழுவ வந்த நதி
    வையாபுரிப் பொய்கையும்
மதியமுத் தஞ்செயும் பொற்கோ புரத்தொளியும்
    வான்மேவு கோயி லழகும்
உச்சிதம தானதிரு வாவினங் குடியில்வாழ்
    உம்பரிட முடிநாயக
உக்ரமயி லேறிவரு முருகசரஹணபவ
    ஓங்கார சித்சொரூப வேள்

அச்சுத க்ருபாகர ஞனமுறை செய்யவே
  ஆழியை விடுத் தானையை
யன்புட னிரட்சித்த திருமான் முகுந்தனெனு
  மரிகிருஷ்ண ராமன் மருகன்
சச்சிதா னந்தபர மானந்த
  சுரர்தந்த சரஹணனே நம்பினவர்மேல்
தர்க்கமிட நாடினரைக் குத்தியெதி
  ராடிவிடுஞ் சத்ரு சங்கார வேலே. 10

சத்ருசங்காரவேற்பதிகம்
முற்றிற்று.

---



உ

முருகன் துணை.

சுப்பிரமணியர் அஷ்டோத்திர

# சதநாமங்கள்.

ஓம் கந்தாயநம:
ஓம் குகாயநம:
ஓம் சண்முகாயநம:
ஓம் பாலநேத்திரசுதாயநம:
ஓம் பிரபவேநம:
ஓம் பிங்களாயநம:
ஓம் கிருத்திகாசூநவேநம:
ஓம் சிகிவாகநாயநம:
ஓம் துவிஷ்டபுஜாயநம:
ஓம் திரிஷணேத்திராயநம:
ஓம் சச்சிதாயநம:
ஓம் விகிதாசிவப்பிரபஞ்சநாயநம:
ஓம் தாரகாசுரசங்காரிணேநம:
ஓம் ரட்சோபலக்ஷிமர்த்தனாயநம:
ஓம் மத்தாயநம:
ஓம் பிரமத்தாயநம:
ஓம் உன்மத்தாயநம:
ஓம் சுரசங்கரக்ஷித்திரேநம:
ஓம் மதபசேனாபதியேநம:
ஓம் பிரஞ்ஞாயநம:
ஓம் கிருபாளவேநம:
ஓம் பக்தவத்ஸலாயநம:
ஓம் உமாசுதாயநம
ஓம் சக்திதராயநம:
ஓம் குமாராயநம:

ஓம் கிரௌஞ்சதாரணாயநம
ஓம் சேநாங்கியேநம:
ஓம் அக்கினிஜன்மனேநம:
ஓம் விசாயகாயநம:
ஓம் சாகாரத்வஜாயநம:
ஓம் சிவசுவாமினேநம:
ஓம் கணசுவாமினேநம:
ஓம் சர்வசுவாமினேநம:
ஓம் சநாதநாயநம:
ஓம் அனந்தசக்தயேநம:
ஓம் அக்ஷோபியாயநம:
ஓம் பார்வதிபிரியநந்தநாயநம:
ஓம் கங்காசுதாயநம:
ஓம் சரோத்பூதாயநம:
ஓம் பாவகிருத்மஜாயநம:
ஓம் ஆகுதயேநம:
ஓம் சிரம்பாயநம:
ஓம் பிசிரம்பாயநம:
ஓம் உசிர்ம்பாயநம:
ஓம் கமலாசனசந்நுதாயநம:
ஓம் ஏகவர்ணாயநம:
ஓம் த்விவர்ணாயநம:
ஓம் திரிவர்ணாயநம:
ஓம் சதுர்வர்ணாயநம:
ஓம் பஞ்சவர்ணாபநம:
ஓம் பிரஜாபதயேநம:
ஓம் ஆபாராயநம:
ஓம் அக்கினிகர்ப்பாயநம:
ஓம் சமீகர்ப்பாயநம:

ஓம் விசுவரேதஸேநம:
ஓம் சுராரிக்கிணேநம:
ஓம் இரணியவர்ணாயநம:
ஓம் சுபகிருதேநம:
ஓம் வசுமதேநம:
ஓம் வடவேஷத்திரதேநம:
ஓம் பூஷ்ணேநம:
ஓம் தபஸ்தயேநம:
ஓம் சுககநாயநம:
ஓம் சந்திரவர்ணாயநம:
ஓம் காலாதராயநம:
ஓம் மாயாதராயநம:
ஓம் மகாமாயாயநம:
ஓம் கைவல்லியாயநம:
ஓம் காலாத்மகாயநம:
ஓம் விசுவயோனயேநம:
ஓம் அமேயாத்மநேநம:
ஓம் தேஜோநிதயேநம:
ஓம் அனமயாயநம:
ஓம் பரமேஷ்டிநேநம:
ஓம் குரவேநம:
ஓம் பிரமணேநம:
ஓம் வேதநாமடாயநம:
ஓம் விரஜிஸேநம:
ஓம் வசவேநம:
ஓம் புளிந்தசங்கியாபக்திரேநம:
ஓம் மகாசாசுவதப்பிரதாயநம:
ஓம் ஆசிரதாகிலதாத்திரேநம:
ஓம் சோரக்நாயநம.

ஓம் ரோகநாசநாயநம:
ஓம் அனந்தமூர்த்தியேநம:
ஓம் அனந்தாயநம:
ஓம் சிகண்டிகிருதகேதநாயநம:
ஓம் டம்பாயநம:
ஓம் பரமடம்பாயநம:
ஓம் மகாடம்பாயநம:
ஓம் விருஷாகபிதேநம:
ஓம் காரவாத்ததேகாயநம:
ஓம் காரணாதீதவிக்கிரகாயநம:
ஓம் அதிசிரயாயநம:
ஓம் பிராணாயநம:
ஓம் பிராணாதாராயநம:
ஓம் பராத்பராயநம:
ஓம் விருத்தபத்தபத்திரேநம:
ஓம் வீரக்னாயநம:
ஓம் ரக்தாயநம:
ஓம் சாமாயநம:
ஓம் பிங்களாயநம:
ஓம் பருவர்ணாயநம:
ஓம் கோபதயேநம:
ஓம் தட்சிணாத்தியபரப்பிரதாயநம:
ஓம் சர்வேசுவராயநம:
ஓம் லோககுரவேநம:
ஓம் அசுராநீகமர்த்தநாயநம:
ஓம் ஸ்ரீசுப்பிரமணியமூர்த்திண்யேநம:
ஓம் நாநாவிதமந்தரபுஷ்பம் சமர்ப்பயாமி:

சுப்பிரமணியர் அஷ்டோத்திர சதநாமங்கள்
மூற்றுப்பெற்றன.

ஸ்ரீ முருகக்கடவுள் துணை.

ஸ்ரீ சுப்பிரமணியர் அகஸ்தியருக்கு உபதேசித்த
மலையாள மாந்திரீக

# சிவசுப்பிரமணியர்

# ஷடாக்ஷர மாலை.

மந்திர, யந்திர, பூஜாவிதியுடன்.

## விபூதி மந்திரிக்க.

ஆசிரிய விருத்தம்.

சம்புமுனி குருமுனி வேதமுனி போதமுனி
சாமி யகத் தீஸ்பரா
சரியையுங் கிரியையும் யோகமும் ஞானமுஞ்
சகல கலைக்யான பரனே
கும்பமுனி கலசமுனி பாருறு வரைதாண்ட
குட்டமுனி ஞானவரலை
கோமள மஞ்ரேமணி பயின்ற நாயகனிடங்
கூடி விளையாடு பரனே,

நம்பினே னுன்பத மன்புட னெந்தனுட
நாவிற் றதித் தட்சரம்
நற்கிருபை தந்துமே முன்னின்று விளையாட
நாடிநின் கருணை புரிவாய்
செம்பிவளர் நாயன்மேற் செந்திவளர் நாயன்மேற்
செப்பு கவசந் துதிக்கச்
செயல்தந்து காத்தருள் தெட்சிணை மூர்த்தியே
சின்மயா னந்த குருவே. 1

அரிநமசி வாயமென் றேது பஞ்சாட்சரத்
தாடு மெஞ்ஞான மணியே
அம்பரி திகம்பரி பரம்பரி நடம் பரியா
டாம்பரி பயின்ற பாலா
விரிகமல முனிவர் துதி பாதனே நீதனே
விமலனே கருணை கரா
விந்தை நடம் நின்றபுரி சுந்தர மிலங்குமயில்
வீரனே சூரர் காலா
சருவசக நாதனே யருமறை விநோதனே
சாமிநின் பாத கமலம்
தஞ்சமென வேநம்பி யெங்குநான் செல்கினுந்
தாழ்வு வாராம லென்றுஞ்
சிறியனுட மனதுகுடி கொண்டெனைக் காத்தருள்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீ ஓம் சரவண பவநம அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவா. 2

சத்தி பராபரி பாலனே ஞாலனே
சாமி சற்குரு நாதனே
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
தற்பரா னந்த மணியே
வெத்திய கோரவடி வேலனே சூலனே
வீர வாகுக் கிறைவனே
வேகமுற் றுடுமயில் வீரனே சுரர்பணியு
மெய்யனே யென் னய்யனே
எத்தேச காலமு முந்தனிரு பாதமே
யேத்தித் துதிக்கு மடியேன்
எங்கே யிருக்கினு மெவ்விடத் தேகினு
மிடர்கள் வாராம லென்முன்
சித்தம துகந்து முன்னின் றெனைக் காத்தருள்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநம ஹரஹரா
சிவ சுப்ரமண்ய தேவா. 8

ஆர்க்குந் தெவிட்டாத அற்புதமெய்ப் பொருளான
ஆனந்த மான சிவமே
ஆதியே சோதியே யன்புள்ள நண்பர்க்கு
அஞ்சல்தா அருமை கூர்ந்தே
ஏற்குந் தயாபரா தெய்வானை நேயனே
யெவ் வுயிர்க் குயிரதான
ஏகாச் சரத்தனே லோகப்பிர சித்தனே
யேழை யெளியோர்களே முகம்

பார்க்கின்ற தருணமென்றன் றுயர்கள் தீரவும்
பகையிடர்கள் பொடிகள் படவும்
பாரிலுள் ளோர்கடுதி மீறவு முந்தனிரு
பாத தாமரையி னியல்பு
தீர்க்கமாய் முன்னின்று காக்கவிது சமயமே
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநம ஹரஹரா
சிவ சுப்ரமண்ய தேவா. 4

மந்திர விநோதனே மாயா சொரூபனே
வாலை யம்பிகை பாலனே
மாயனுட மருகனே தாய்வள்ளி பங்கனே
வாண வர்க்கனு கூலனே
சந்திர சேகரா ஏகபரி பூரணா
தயாபரா கருணாகரா
சண்முக சிகாமணி யீராறு கையனே
சத்ய வாசக மெய்யனே
எந்தனுட குருசாமி யெனதுகுல தெய்வமே
யெனையீன்ற தந்தை சுற்றம்
எல்லோர்க்கு முனதுகதி யல்லாது வேறில்லை
யெங் கெங்குமே செல்கினும்
சிந்தைய தாகந்துமுன் னின்றெனைக் காத்தருள்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநம ஹரஹரா
சிவ சுப்ரமண்ய தேவா 5


நம்
சிவாயநம
சிவாயநம
ஐயும்
கிலியும்
சௌவும்
லங்
ஓம்

ஸ்ரீ

சுப்பிரமணிய ஸ்வாமிநேநமஃ.

# ஞானவழிக்கும், கஷ்ட நிஷ்டூரங்களுக்கும், துன்பம், பீடைகளுக்கும், புத்திரசந்தானத்திற்கும், மோக்ஷத்திற்கும், விபூதி மந்திரிக்க, பூஜை செய்யவேண்டிய விதி.

இந்த யந்திரத்தை தங்கத் தகட்டில் சமசதுரம் அதாவது பஞ்சபூதம்—5, ஆராதாரம் ஆறும் சமமாக்கி யதற்கு பஞ்சமூர்த்திவிரல் அகலம் நீளம் தகடு தட்டி அதில் இந்த யந்திரத்தை வரைந்துக்கொண்டு அக்ஷரங்களை அடைத்து பிறகு ஒரு இடத்தை சுத்திசெய்து அதில் அறுகோணம் கோலம் போட்டு 5-தீபமுள்ள விளக்கு 5-வைத்து தூபதீபம் காட்டி பிறகுதான் சுத்தியாய் ஸ்நானம் செய்து நார்மடி பட்டு உடுத்தி நித்திய கர்மாநுஷ்டானம் முடித்து ஒரே சிந்தனையாகவும், சுசியாகவுமிருந்து விளக்கு தீபம் பிள்ளையார் வைத்து தேங்காய், பழம், வெத்திலைப் பாக்கு, விபூதி, சந்தனம், குங்குமம், புஷ்பம் வைத்தும் சார்த்தியும் செய்துக்கொண்டு ஊதுவத்தி, பன்னீர், அத்தர், புனுகு, ஜவ்வாது இதுகளை நகட்டுக்கு சார்த்தி, பால், சர்க்கரை, மரிதளம்பழம், தேன், பன்னீர், இதுகளை வைத்து நெய் விளக்கு ஏத்திக்கொண்டு கிழக்குமுகமாயிருந்து

மேல்சொல்லிய தியான சுலோகத்தை 9-தடவை பாராயணம் செய்துக்கொண்டு தேங்காய் உடைத்து ஜல கந்த புஷ்ப தீப தூபம் கற்பூர தீபம் கொடுத்து அடியிற் கண்டிருக்கும் மூல மந்திரத்தை நாள் ஒன்றுக்கு 1008-உரு வீதம் 21-நாட்கள் பூஜைமுதலானதுகளுடன் ஜெபம் செய்தால் சித்தியாகும்.

சித்தியான பிறகு எந்த காரியமும் நல்லமார்க்கமான சங்கதிகளுக்கு எந்தவிதம் தாம்செய்ய முயர்ச்சித்துக்கொள்ளுமோ அதே பிரகாரம் கட்டாயமாய் முடியும். அதாவது ஞானவழிக்கும், கஷ்ட நிஷ்ரேங்களுக்கும், துன்பம், பீடைகளும், புத்திர சந்தானம், இஹபரசுக மோக்ஷார்த்தங்களுக்கு விபூதியாலும் யந்திரத்திலும், பூசை முகமாயும் சித்தியான பேர்களுடைய வாக்கினுலும் கடாக்ஷித்தால் சுபம்.

## மூலமந்திரம்.

ஸ்ரீயும், அய்யும், கிலியும், ஔவ்வும்,
ஸ்ரீயுப், ரீயும், ஹரியும், ராம், லம், க்ஷம்,
ஸ்ரீஓம் சரவணபவா நம அரஹரா சிவா
சுப்பிரமண்ய தேவா
என்று 1008-உரு ஜெபிக்கவும்.

ஸ்ரீ

சுப்பிரமணியக்கடவுள் துணை.

# எதிரியை விலக்க.

வடமேரு கிரியுச்சி மேல்கொண்டு குதியிட்டு
வால்சிறகு தான் விரித்து
வட்ட மிட்டே யெழுந் தண்டபகி ரண்டமு
மணிமுகடு இடுகி டெனவே
சடசடென அஷ்டகிரி விண்டு தூளாகவே
சாகரத் தலை மோதவே
தடுமாறவே கேசம் சேடன் முடிமாற்றவே
தத்தளித் தாண்மை முங்க
நடனமிடு தோகை மயின்மீதேறி விளையாடு
நாதனே யுனது பாதம்
நம்புமடியேன் றனக்கஞ்சல் தந்தனு தினமு
ரட்சிக்கு முனது கிருபை
திடமாக முன்னின்று காக்கவிது சமயமே
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவணா பவநம அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவா.

கடகம் வாள் சக்கரம் சூலங் கபாலமழு
 கண்ட கோடாலி யேந்திக்
கழலிணையி லிடும் வீரதண்டைக ளசைந் தொலிக்
 கலீர்க் கலீரென் றொலிக்கத்
த-த டெனவே திரண்டாக்ர மித்தே யெனது
 சத்துருக் களைப் பிடித்துத்
தலையுடல்கள் கரமொடு கால் சிதறக் குத்தியே
 தாக்கித் தகர்த் துழக்கி
குடலோடு கல்லியே யுதிரங் குடித்துமே
 கொப் பழித்துக் களித்துக்
குமரா செயஞ் செயஞ் செயமென் றுனதுபுகழ்
 கொண் டாடியே துதிக்கத்
திடமுடைய பூதங்கள் சூழவந்தாளுவாய்
 செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநம அரஹரா
 சிவ சுப்ரமண்ய தேவே. 7

அட்டகிரி யெட்டும் திட்டிடவு வட்டமிட்
 டாலித் துமே குதித்தே
அணியண்ட முகடண்டி வெளிசென்று குதிகொண்டு
 ஆக்ர மித்தே மீறியே
துட்டப் படுத்துவரை வெட்டி யெதிரிட்டு அணு
 தூளாய்த் தகர்த் துழக்கி
சூதுற்ற சாலப் பேயேவல் பேயோ...
 தாரத்தியு மடித் தேகியே...

விட்ட தனை யெத்திபுடல் பிளவை யிட்டுக் கிரம
வெற்றி மாலிகை புனைந்து
வேலெடுத்துங் கோலாகல செயஞ் செயமென்று
மிகநாடி யன்பு கூர்ந்து
திட்டமுட னவவீரர் சூழவந் தாளுவாய்ச்
செந்தி லம்பதி வேலனே
ஸ்ரீஓம் சரவண பவநமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 8

நவரத்ன மகுடமுடி தளதளென விருகுழையில்
மகர குண்டல மிலங்க
நற்கமல மதிமுகத் திலதம திலங்கவே
நறுமணங் கமக மெனவே
கவசமணி மார்பிற் கடப்பமல ரசையவிடு
கையில் வாள்கிலை யிலங்க
கலையென்னு நுதலில் வெண்ணீறும் புனைந்திலகு
காலிற் சிலம்பு கொஞ்ச
புவனமோ டண்டபகி ரண்டங் குலுங்கவே
பூத கணமது சூழவே
பூவுலகில் மிடியிடர்க ளணுகாமலே யுனது
பூரணக் கிருபை கூர்ந்து
சிவவீர வாகுடன் முன்னின்று காத்தருள்செய்
செந்தி லம்பதி வேலனே
ஸ்ரீஓம் சரவண பவநமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 9

அரிஹரி நமசிவய சிவயசர வணபவா
அரஹரா சிவய சிவய
அங்கங்கு சிவவசிய நமவசிய நமவசிய
ஆங்கார கோர வீரா
மரிமரி சருவதே வதைகளைப் பிடிபிடி
மாறுமார் வீசு வீசு
வணங்காத துஷ்டப் பிசாசுகளை யெல்லாம்
வளைந்தே பிடித் திறுக்கி
எரிஎரி நசிநசி அரஹர நசிமசி
யேறுயேர் வீசு போடு
எங்கெங்கு செல்கினு மங்கங்கு முன்னவத்
தென்றன் முன்றோன்றி நின்று
திரமருள் செய்யீஸ்பரன் காக்கவருள் செய்குவாய்
செந்தி லம்பதி வேலனே
ஸ்ரீ ஓம் சரவண பவநமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 10


ஓம்
ர
ச
ஹ
வ
ண
ப

ஸ்ரீ

செந்திலாண்டவன் துணை.

## எதிரியை விலக்கவும், துஷ்டபரிபாலன சிஷ்டானுக்கிரஹ சக்திகளுக்கும், விபூதியாலும், யந்திரத்தாலும் சில்சிட்டு கெடியாரங்களாலும் சித்திபெறச் செய்வதற்கு பூசை செய்யவேண்டிய விதி.

இந்த சக்கரத்தை காரீயத்தினால் ஆராதார விரல் கணக்கில் சமசதுர தகடு அடித்து அதில் சக்கரத்தை வரைந்து யந்திரத்திலுள்ள அக்ஷரங்களை அடைத்து ஒரு தாம்பாளத்தில் விபூதி பரப்பி அதன் மத்தியில் ஷை தகடு வைத்து ஒரு சுத்தமானவிடம் தயார் செய்துகொண்டு அந்தவிடத்தை சுத்தி செய்து கோலம் போட்டு லக்ஷிமி விளக்குவைத்து அத்தீபத்திற்கு வலது பக்கத்தில் நுனிவாழை இலைபோட்டு அதில் பிள்ளையார், வெத்திலைப் பாக்கு, விபூதி, சந்தனம் குங்குமம், மஞ்சள், பன்னீர், தேங்காய், பழம், புஷ்பம், அவல் கடலை, சர்க்கரை, பொங்கல், இதுகளை வைத்து சாம்பிராணி தூபம் கொடுத்துக்கொண்டு, தான் சுசியாய் ஸ்நானம் செய்து அனுஷ்டானுதிகளை முடித்துக்கொண்டு சுத்தஸ்வச்ச பட்டு வேஷ்டி

உடுத்திக்கொண்டு ஷை யந்திரத்திற்கு ஜல - கந்த-புஷ்ப-தீப-தூப நைவேத்தியம் செய்துக்கொண்டு மேற்சொல்லிய தியான சலோகம் 5-ஐந்தும் தீர்க்கமாய் வாசித்து அதேபிரகாரம் 7, 9, 11, தடவைகள் பாராயணம் செய்துக்கொண்டு ஷை யந்திரத்திற்கு கற்பூர தீப நைவேத்தியம் செய்துக்கொண்டு புருவ மத்தியில் கற்பூரதீப ஒளியைப் பார்த்து கீழ்காட்டியுள்ள மூலமந்திரத்தை பளிங்குமணியால் நாள் 1-க்கு 1008-உருவீதம் 15-நாட்கள் தினந்தோறம் ஜபம்செய்ய சித்தியாகும்.

சித்தியான பிறகு துஷ்டபரிபாலன சிஷ்டானுக்கிரஹ சக்திகள் யாவையும் விபூதியாலும், குளிச்சத்தினாலும், சில்சிட்டு கெடிபாரங்களாலும் அனுகூலமாகச் செய்யலாம்.

மூல மந்திரம்.

ஸ்ரீயும், ஐயும், கிலியும், ஔவ்வும்,
சௌவும், ஓம், ஸ்ரீம், ஓம், சரவணபவ நம,
ஹர, ஹர, சிவசுப்ரமணியதேவா என்று
ஈசானயமூலமாக உட்கார்ந்துக்கொண்டு
நாள் 1-க்கு 1008-உருவீதம்
ஜெபிக்கவும்.

உ

ஸ்ரீ கந்தவேல் துணை.

## பைசாசுக்குப் பார்க்க.

வஞ்சனைகள் பில்லியொடு ஏவல் சூனியமரண
மாரண பேத னங்கள்
வல்வினைகள் செய்கின்ற வஞ்சரைக் குத்தியே
மார்பைப் பிளந் தெறிந்து
மிஞ்சிய சதாகோடி பூதப் பசாசுகளை
வெட்டித் துணித் துழக்கி
வெருள் பிரமராக்ஷசி பேச்சி ராக்காச்சியை
விரட்டியே தாக்கு தாக்கு
அஞ்சப் பிடித்துமே சப்பாணி மாடனை
யணலிட் டெரித்து ஊது
ஐயனே உச்சாடி யடித்துத் துரத்தியே
ஆர்ப்பரித் தருள் புரிந்து
செஞ் சதங்கை கொஞ்சமுன் னின்று காத்தருள்செய்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 11

அரிஓம் சிவாயநம ஓம்பவ சரவணபவ
அர ஹரா நமசிவாயா
ஆங்கார கோர சங்கார ருத்திரா
அகோர ரணவீர பத்ரா
பரிபூரணபவ சரவணபவா தாக் கெண
பகைஞரொடு சர்வபூத
பசாசுகள் தன்னெஞ்சு திடுக்கிட்டு அலறியே
பதை பதைத்தே கடுங்க
எரிஎரி சுடுசுடு நசிநசி மசிமசி
யேறுயேர் போடு போடு
எங்கெங்கு செல்கினு மங்கங்கு முன்னின்று
என்றனக் கஞ்ச லென்று
திரிபுர தாண்டவ ராயனே காத்தருள் செய்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 12

நன்மையுந் தன்மையு முத்தியு மோட்சமு
ஞானமு மறி வின்பமும்
நாவினிற் செந்தமிழ் வசியமு மோகனம்
நாடியே கருணை புரியும்
உன்மனம் ஓம்ஆம் என்றச் சரஞ்சித்தியெட்
டுண்மையாய்க் கிருபை கூர்ந்து
உன்செயல் அஞ்சமென் றெங்குநான் செல்லினு
முகந்து முன்னின் றெதிர்த்த

வன்மனது சத்துரு துஷ்டப் பசாசுகளை
மரிபிடி யேறு தாக்கு
மசிமசி நசிநசி மயமய சீக்கிரம்
வரவர குரு தேசிகா
சின்மயை சரவண பவாயாவா காத்தருள்செய்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநமா ஹரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 13

அரிநமோ நாரணு சிவய சரவணபவ
ஆகிரிசு வசி மோகனு
அனவரத தாண்டவ ராயனே மாயனே
ஆதியே பரமே சுரா
பரிபுர பவகிருபை கருணைபுரி மெஞ்ஞான
பரஞ்சோதி யழகு மணியே
ப்ரம யீஸ்பரி மனோமணி சதாசிவ னுதவு
பாக்கியம தான தனியே
சருவ வுயிர் நாயகா அடியவர்கள் தாயகா
சாமியெளி யோர்கள் மனது
தாகந் தெளிந்திட வுதமென்று முன்னின்று
தயவது புரிந்து நினது
திரமருளி நீவந்து எந்தனைக் காத்தருள்செய்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநம ஹரஹரா
சிவ சுப்ரமண்யதேவே. 14

அயிலேந்து கையனே மெய்யனே சோதியே
அழகுபெறு திருடை மணியே
ஆனந்த நடனமிடு பாதா விநோதனே
அகிலாண்ட குரு தேசிகா
மயிலேறு கர்த்தனே ஞானமே மூலமணி
மந்திர விசால லோலா
வாலை யம்பிகை செய் தவத்தினி லுதித்துமே
வந்த மெஞ்ஞான வடிவே
கயிலையங் கிரிவாச குமரேச வரவர
காட்சி யருள் தரவு நீயே
கல்வியும் யோகமும் ஞானமு முத்தியு
கருணையும் புரிந்து முன்றன்
செயல்தந்து முன்னின்று காக்கவருள் செய்குவாய்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவகம ஹரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 15

உம்பர்பணி நாயகா வேதாந்த நாயகா
வோது செந்தமிழ் நாயகா
ஓங்கார நாயகா ரீங்கார நாயகா
ஒ ரெழுத்துள நாயகா
அன்பணி நாயகா ஆறுமுக நாயகா
அருமறைப் பொரு ளாயகா
அட்சர விநாயகா யேகாட்சர நாயகா
ஆறெழுத் தருள் நாயகா

நம்பினோ ணுயகா தெய்வானை நாயகா
நளினமுறு மாது வள்ளி
நாயகா அற்புதம தாகவளர் நாயகா
நற் கருணைபுரி நாயகா
தென்பொதிகை நாயகா நாயனே காத்தருள்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநம ஹறஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 16

கற்பக நாயகா நற்றுணை நாயகா
கருணை புரிகிற நாயகா
காரண நாயகா பூரண நாயகா
கருணை.யங்கட ணுயகா
அற்புத நாயகா உற்பன நாயகா
அட்ட அட்சர நாயகா
அரனெளியி நாயகா பவனெளியி ணுயகா
அரி நமசிவய நாயகா
தற்பர நாயகா சற்குரு நாயகா
சடாட் சரப்பொரு ணுயகா
தம்பமினி நாயகா நம்பினோ ணுயகா
தமி ழிசைபுரி நாயகா
சிற்பர நாயகா காத்தருள்செய் நாயகா
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநம ஹறஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 17



ஓம்

ஸ்ரீகுகாய நம:

---

## ஏவல், பில்லி, சூனியம், பிசாசுகள், பிரம்ம ராக்ஷசிகள், காட்டேரி, மாடன், கருப்பான் முனி முதலிய துஷ்ட தேவதைகளை விலக்கி சித்திபெற

## பூசை செய்யவேண்டிய விதி.

இந்த சக்கரத்தை பஞ்சவிரல் சமசதுர செப்புதகடு அடித்து அதில் சக்கரத்தை வரைந்து அக்ஷரங்களை அடைத்துக் கொண்டு ஒரு இடத்தை சுத்திசெய்து தூப தீப நைவேத்தியம் கொடுத்து அந்த இடத்தில் தாமரைக் கமலம் போட்டு பஞ்ச தீபம் விளக்கு வைத்து அந்த விளக்கு முன்னிலையில் நுனி வாழை இலைபோட்டு அதில் தேங்காய், பழம், வெத்திலைப் பாக்கு, கற்பூரம், சாம்பிராணி, ஊதுவத்திகள் பழவர்க்கங்கள் பன்னீர், சந்தணம், குங்குமம், புஷ்பம் சாத்தி, தான் சுசியாய் ஸ்னனம் செய்து பட்டுமடி தரித்து, நித்ய கர்மானுஷ்டானம் முடித்துக்கொண்டு கிழக்கு முகமாய் உட்கார்ந்து மேலேசொல்லிய 7-தியான சுலோகங்களை 11-தடவை பாராயணம் செய்துக்கொண்டு ஜல-கந்த-புஷ்ப-தீப-தூப-கற்பூர நைவேத்தியம்

செய்துக்கொண்டு தேங்காய் உடைத்து நைவேத்தியம் கொடுத்து சுழிமுனையில் வாசிகூட்டிக்கொண்டு கீழ்காட்டிய மூலமந்திரத்தை துளசி மணியால் நாள் 1-க்கு 1008 உரு வீதம் 11-நாட்கள் விரதமிருந்து ஜெபம் செய்ய வானம் சித்தியாகும்.

சித்தியான பிறகு எதிரியால் விடப்பட்ட ஏவல், பில்லி, சூனியம், மாரணம், பிசாசு குட்டிச்சாத்தான், காட்டேரி, மாடன், கருப்பான், முனி, அப்பனர், குரளி, யக்ஷிணி, துஷ்ட தேவதைகள் இதுகளையும் பிசாசுப் பிடித்தவருக்கும் கிருக்குக் கொண்டவருக்கும் இன்னும் அனேக விஷபங்களையும், யந்திரத்தினாலும் பூசையினாலும், விபூதியினாலும் மந்திரித்து பூசைமுகத்தில் வைத்து பூசைபண்ண மேற்சொல்லிய சர்வமும்விலகி விடும்.

மூலமந்திரம்.

ஸ்ரீயும், அய்யும், கிலியும், செளவும்,
ஒளவ்வும், ஓம், ஸ்ரீயும், சரவணபவா நம
அரஹரா சிவசுப்பிரமண்ய தேவா
என்று நாள் 1-க்கு
1008-உரு ஜெபிக்கவும்.

உ

முருகக்கடவுள் துணை.

# இருட்டில் வழி நடக்க.

அருமை புவிமீது தடுத்தாண்டருளும் நாயகா
அய்யனே செய நாயகா
ஆறுவரை மேல்கடந்தப் புறவிலா சத்தி
லேந்து நடமிடு நாயகா
பொறுமை தருநாயகா அறிவில்வளர் நாயகா
பொதிகை யோன்பணி நாயகா
பொருளருட் கிருபையுங் கருணை மெஞ்ஞானமும்
போதமுஞ் செய் நாயகா
சருவவுயிர் நாயகா சண்முகவி நாயகா
சத்தி பெற்றிடு நாயகா
சங்கு சக்கரஞ் சூலமழுமேல் கரத்திற்
றரித்திலகு குரு நாயகா
திரிபுவன நாயகா முன்னின்று காத்தருள்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநம ஹரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே 18

பரங்கிரி நாயகா சிகந்துதி நாயகா
பாலலோசன நாயகா
பரப்பிரம நாயகா தவப்பிரம நாயகா
பஞ்ச அட்சர நாயகா
துரந்தர நாயகா செல்வவேல் நாயகா
தோகை மயில்மிசை நாயகா
சோதிமணி நாயகா ஆதிமுதல் நாயகா
சொர்தடிமை தரு நாயகா
நிரந்தர நாயகா சண்முக நாயகா
நேர்கிருபை தரு நாயகா
நின்பதம் நாயகா நம்பினே னுயகா
நின்செயல் புரி நாயகா
திரந்தரு நாயகா முன்னின்று காத்தருள்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநமா ஹராஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 19

கடம்பணி நாயகா சருவலோக நாயகா
காகமூ காசல நாயகா
கந்தர துரந்தர சவுந்தர நாயகா
ககனவெளி தனில் நாயகா
நடம்புரி நாயகா மறைவேத நாயகா
நாநந்த வெளி நாயகா
நந்திபணி நாயகா கங்கையருள் நாயகா
நளின பிரணவ நாயகா

தடந்தொரு நாயகா நீபான நாயகா
 தானில்லை யெனு நாயகா
சரசமய நாயகா ஓமெனும் நாயகா
 சாமி வாகுரு நாயகா
திடந்தரும் நாயகா முன்னின்று காத்தருள்செய்
 செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநமா அரஹரா
 சிவ சுப்ரமண்ய தேவே. 20

மூவர்குரு நாயகா ஆனந்த நாயகா
 முடிவினடமிடு நாயகா
முத்தியருணயகா சித்தியரு ணயகா
 முத்தொழிலுமுள நாயகா
யாவர்குரு நாயகா அழகுமயில் நாயகா
 ஆவினங்குடி நாயகா
அத்தியிட நாயகா சத்திபயி நாயகா
 அடிமை யெனையா நாயகா
வாவா குரு நாயகா செயல் கருணை நாயகா
 வர மூதவிபுரி நாயகா
மணிமந்திர நாயகா கனவிஞ்சை நாயகா
 வள்ளியம்பாள் நாயகா
தேவர் குரு நாயகா முன்னின்று காத்தருள்
 செந்திலம்பதி நாயகா
ஸ்ரீ ஓம் சரவண பவ நமா அரஹரா
 சிவ சுப்ரமண்ய தேவே. 21

அச்சர நாயகா ஆங்கார நாயகா
அகோர கோரரண நாயகா
ஆடம்பர நாயகா ஏகாம்பர நாயகா
அம்பரத்தரு நாயகா
உச்சாடு நாயகா சரவண நாயகா
எனது செயல்புரி நாயகா
ஓமெனும் நாயகா ஆமெனும் நாயகா
உண்மையருடரும் நாயகா
இச்சணம் நாயகா சித்தியரு நாயகா
வெட்டெட்டும் வர நாயகா
எங்கெங்கும் நாயகா முன்னின்று நாயகா
எனைக் காத்தருள் நாயகா
தெச்சண நாயகா உம்பர் தம் நாயகா
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீ ஓம் சரவணபவ நமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 22

குலுங்கு செஞ்சடைகளும் நவமணியின் மகுடமும்
குழைகுண்டலச் சிறப்பும்
கூர்மை வேல் விழிகளும் நுதலி லிடுதிலதமும்
குமிழி னிற்போல வழகும்
இலங்கில முகங்களுங் கனிவாயினிற் பவள
விதழினுட தெளிவி னகையும்
மீராறு கைகளும் பன்னிரு புயங்களு
மில கொழுகு மார்பு தோளும்

துலங்கிய கடப்பமலர் மாலிகையும் வயறுந்தி
சுழித்த ரோமத் தொழுங்கும்
துடியிடை யணிந்தசெம் பட்டுடையு முன்பதந்
தோன்றிட வென்றன் முன்னே
சிலம்பு கலகல வென்னவா வாவென்னையனே
செந்திலம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 23

கங்காளி திரிசூலி மகமாயி கவுமாரி
காளி முக்கண்ணி நீலி
காமாட்சி மீனாட்சி சாலாட்சி ஞாலாட்சி
காரணி வாலை புவனை
அங்காளி சிவகாமி அபிராமி திரிபுரை
ஆனந்தியோ மனோ[illegible]
ஆச்சி யருள்புரிகின்ற காச்சி நவமணியான
ஆறுமுகநாதா வாவா
எங்கோனே நீ வாவா யென்சாமி நீ வாவா
யெனதுகுல தெய்வமே வா
என்னையினி யாளவா யேழைபங்காளவா
பிதுசமயம் வேளே வாவா
செங்கை வேலாயுதா வாவெனைக்காக்கவே
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 24

மையுற்ற வேல்விழி தெய்வானை நேயவா
வள்ளி மனோகரா வா
மாணிக்கமுத்து மாவிலககடம் போடுமெறு
மாலைபுனை வாசனே வா
கையுற்ற வங்கார சத்திவடி வேலவா
கனகந்த சாமியேவா
கருணையங் கடலேவா கருணாகடாச்சனே
காங்கையா யிங்குவாவா
மெய்யுற்ற வேதமே வேத வேதாந்தமே
மெய்ப்பொருளே யிப்பவாவா
வித்தேயவ் வித்தினில் வடித்தமுத் தையனே
வேளை யிதுசமயம் வாவா
செய்யாத வுதவியாய் செய்குவாய் முன்னின்று
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநம அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே, 25

காவுகந் ததிவேடர் பாவைசுந்தர மாது
காமவிங்கிதனே வாவா
காளியப்பிகை மீனாள் வாலைசுந்தரிபால
கயிலை யங்கிரி வேலவா
நாவிசைந்திடு தமிழை யோதுகுரு நாதனே
ஞானமந்த்ர சொரூபனே
நானுமுன் பதநாடினேனன்பு கொண்டெந்த
நாளுநின் செயல் புரிகுவாய்

தாவிநின்றடியனுட கூடநின் றிதுவேளை
சாமிவந் தெனையாளுவாய்
தற்பராநீ கெதியாகையா லேழைமேற்
றயவுமாறுதிருப்பாய்
தேவகுஞ்சரிபாக காத்தருள்செய் யன்பாக
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 26


நங்
சிவாயநம
நமசிவாய
ஐயும்
ண
கிலியும்
ஹம்
ரம்
வம்
வம்
ய
ர
வ
ச
ஸ்ரீயும்
வங்
4

ஸ்ரீ
சண்முகக்கடவுள் துணை.

## இருட்டில் வழி நடக்கவும், பேய் - பிசாசுகள் அணுகாதிருக்கவும், மிருகஜெந்துக்கள், நாய், நரி, கழுதை, சர்பம் முதலானதுகள் அணுகா திருக்கவும் சித்தி பெற

## பூசை செய்யவேண்டிய விதி.

இந்த சக்கரத்தை ஆறுவிரல் சமசதுரமாக செப்பு தகடு அடித்துக்கொண்டு அதில் ஷை சக்கரத்தின் கோடுகளை வரைந்துக்கொண்டு அதினுள் அக்ஷரங்களை ஒன்றும் பிசகாமல் அடைத்துக்கொண்டு ஒரு இடம் சுத்திசெய்துக்கொண்டு அந்தயிடத்தில் தீபம்வைத்து அத்தீபத்திற்கு வலது பக்கம் நுனிவாழை இலை 2 இரண்டு போட்டு அதில் நீர் புரோக்ஷித்து மஞ்சளால்பிள்ளையார் பிடித்துவைத்து தேங்காய், பழம், வெத்திலைபாக்கு, கற்பூரம், சாம்பிராணி, சந்தனம், குங்குமம், ஊதுவத்தி, எலுமிச்சம்பழம், இளநீர், சுண்டல், வடை, இதுகளையும் வைத்து தீபத்திற்குமுன் விபூதி பரப்பி அதின் மத்தியில் ஷை செப்பு தகடு வைத்து பிறகு அலரி புஷ்பம் சாத்தி தான் சுசியாய் ஸ்நானம் செய்து நார்மடிபட்டு உடுத்தி நித்தியகர்மானுஷ்டானம் முடித்துக்கொண்டு பூசை செய்யப்போகும் இடத்திற்குப்போய் தெர்ப்பை ஆசனம்போட்டு நிர்ருதி திசையை நோக்கி உட்கார்

ந்து யந்திரத்திற்கும், விளக்கிற்கு ஜல-கந்த-புஷ்ப-தீப தூபாரா தனைசெய்து தனது சொந்தகுலதெய்வத்தை சங்கல்பம்செய்துக் கொண்டு தாமரை மணியால் மேற்சொல்லிய 9-தியான சுலோகங்களையும் 5-அல்லது 7-அல்லது 9-தடவைகள் பாராயணம் செய்துக்கொண்டு பிராணயாமத்துடன் கீழ்சொல்லிய மூல மந்திரத்தை நாள் 1-க்கு 1008-உரு வீதம் 21-நாட்கள் கர்மாநுஷ்டானம் தவராமல் பூஜித்து ஜெபித்துவந்தால் 21-நாள் பூர்ண கடாக்ஷ சித்தியைப்பெறலாம்.

சித்தியானபிறகு சகல ஜனங்களுக்கும் வழி நடக்கும் போது, விபூதியாலும், துளிச்சத்தினாலும், கெடியார சீட்டுகளாலும் இன்னும் அநேக விதமாய் செய்துக்கொடுத்தால் பேய், பிசாசுகள் அருகே அணுகாது. மிருகங்கள், நாய், நரி கழுதை சர்பம் முதலிய துஷ்ட ஜெந்துக்கள் அருகாமை நாடாது. புத்தி சாதுர்யவானானால் தீர்க்க ஆலோசனைசெய்து இன்னும் சில விஷயங்களையும் இதே பூசையினால் சித்தி பெறலாம்.

மூலமந்திரம்.

கிலியும், ஔவ்வும், சௌவும், ஓம், ரீயும், அய்யும், ஸ்ரீயும், ஓம், சரவண பவா நம அரஹரா சிவ சுப்பிரமண்ய தேவா என்று நாள் 1-க்கு 1008-உரு ஜெபிக்கவும்.

ஸ்ரீ

சுப்பிரமணிய ஸ்வாமிநே நமஃ.

# தேகம் சௌக்கியமாயிருக்க

உள்ளமதி லுள்ளதோர் வருத்தமது தீரவும்
உகந்துவா வென் னையனே
உன்செயல் தஞ்சமென் றெங்குநான் செல்கினும்
உதவிசெய யையனே வா
கள்ள னிவனுமென்ன ஏசாமல் நித்தமுங்
காத்தருளு நாயனே வா
கல்வியும் யோகமும் ஞானமு முத்தியுங்
கருணைசெய் யையனே வா
வள்ளிபங்காளனே தெய்வானை நேயனே
வாவாவென் னையனேவா
மாறுமலென் றனுட மனது குடி கொண்டென்னை
வாழ்விக்குமையனே வா.
தெள்ளிய தமிழ்ப்புனை சிறியனைக்காக்கவா
செந்திலம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவணப்பவ நமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே.

7

அன்றென்னை யன்னை வயிற்றினிலுருவா
யமைத்தவா வருக வருக
அழகு முப்பத்திரண் டைம்பூத முன்னிட்டு
அமுது தந்தைய வருக
நன்றுனநா ளைம்பத்தாரினில் மறப்பித்த
நாயகனிங்கு வருக
நன்மைபெற வேயதில் தண்டைகள் சிலம்பிட்டு
நடைபிடித்தய்ய வருக
என்றுங் குடும்பிகள் திருத்தியும் வளர்த்தாண்டி
யென்றனைத்தைய வருக
இசையுமுத் தமிழறிவு நாளும் புகட்டியே
யெனைவளர்த் தைய வருக
சென்றிட யெங்குமுன் னின்றெனைக் காக்கவா
செந்திலம்பதி நாயகா
ஸ்ரீ ஓம் சரவணபவ நமா அரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 28

கோகில மறைக்கெளிய தவநெறி செழுஞ்சுடர்
கொழுந்தே கோமளை பாலனே
குருபராநின் பதம் நம்பினேனென்றுமே
குவலையந் தன்னிலுள்ளோர்
ஏசாதெனைக் கண்டு நகையாமலறிவிலா
னெனவும் பழித்திடாம
லென்றனது முன்னின்று உன்னருள் புரிந்துமே
யெந்தனைக் காக்கவாவா

மாசிலாமணியேவா மந்திரப்பொருளேவா
வள்ளி தெய்வானைபங்கா
மயின்மீதி லேறியே நொடியில்வா யிதுசமயம்
மைந்தன்மே லன்புகூர்ந்து
தேசிகா யிங்குவா யென்றனைக் காக்கவா
செந்திலம்பதி நாயகா
ஸ்ரீ ஓம் சரவணபவ நமா அரஹரா
சிவ சுப்பிரமண்ய தேவே. 29

சம்போ சதாசிவா சூலாகபாலனே
சங்கு சக்கர வேலவா
சண்டமாருத கோர உத்தண்ட கெம்பீர
சண்முக துரந்த ராஜா
அன்பர்களை யாண்டு குடிகொண்டு ரச்சித்திடும்
ஆறுமுக தேசிகா வா
ஆடுமயி லேறிவிளையாடு குகனே சிவனே
அஞ்சலென் றருள் புரிகுவாய்
நம்புமடியே னுனது தம்பமிசை இன்பமுட
னாடி நீ வருக வருக
நானெங்குசெல்கினு தானங்கு முன்னின்று
நாயனே காக்க வாவா
செம்பவளவாயனே வெகுசம்பர தாயனே
செந்தி லூம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவணபவநம ஹரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 30


நமசிவாய
அ
இ
உ
எ
ஒ
வவ்வும்
சௌவும்
ஓளம்
சௌவும்
லம்
லம்
லம்
லம்

ஸ்ரீ

பழனியாண்டவர் துணை.

---

## தேகம் சௌக்கியமா யிருக்கவும் சகல ஜனபீடைகள் நீங்கவும், அனேக கஷ்ட நிஷ்டூரங்கள் நீங்கவும், பழம், இளநீர், நூல்சரடு மந்திரித்துக் குடுக்கவும், தேள், நட்டுவாக்கடி, பூனைக்கடி, நாய்கடி முதலிய விஷங்களும் நீங்கி சௌக்கியமடைய பூசை செய்யவேண்டிய விதி.

இந்த சக்கரத்தை ஆருவிரல் சமசதுரத்தில் வெள்ளியி னால் தகடு அடித்து அதில் சக்கரத்தினை வரைந்துக்கொண்டு அதினுள் அக்ஷரங்களையும் பீஜாக்ஷரத்தையும் அடைத்து ஒரு சுத்தமான இடம் தயாரித்துக்கொண்டு சாணத்தால் மெழுகி தாமரை கோலம் போட்டு கோலத்தின் மத்தியில் வெள்ளி தாம்பாளத்தில் குங்குமம் பரப்பி அக்குங்குமத்தில் ஷை தகடு வைத்து அத்தகட்டுக்குமுன்னே லக்ஷ்மி விளக்கு வைத்து புஷ்பம் சார்த்தி விளக்கிற்கு வலது பக்கத்தில் ஒரு பலகை பீடம்போட்டு அதற்கு பட்டுவஸ்திரம் சாத்தி ஒரு கண்ணடி

பதிர்ந்து அதின் கீழ்பக்கத்தில் நுனிவாழை யிலைபோட்டு அதில் நெல் பொரி, அவல், கடலை, வெண்பொங்கல், சர்க்கரை, கற்கண்டு, சந்தனம், குங்குமம், ஊதுவத்தி, தேங்காய், பழம், எலுமிச்சம்பழம், பன்னீர், விபூதி, கும்பகலசம்-1. பஞ்சாமிர்தம், இதுகளை வைத்து தான் சுசியாய் ஸ்நானம்செய்து நித்திய கர்மாநுஷ்டானம் முடித்துக்கொண்டு வாயு திசை நோக்கி பலகை ஆசனத்தின்மேல் உட்கார்ந்து தீபத்திற்கும், தகட்டிற்கும், யந்திரத்திற்கும், கற்பூரதூப தீபாராதனை கொடுத்து ஒரே சிந்தனையா யிருந்து மேற்சொல்லிய 4-தியான சுலோகங்களையும் 7-அல்லது 9, 11-தடவைகள் பாராயணம் செய்துக்கொண்டு பிறகு கீழ்சொல்லிய மூலமந்திரத்தை நாள் 1-க்கு 1008-உரு வீதம் 41-நாள் காலையும் சாயங்காலமும் ஆக இரண்டு வேளையும் சீந்தில் தழை மாலைகட்டி அந்த மாலையினால் ஜெபிக்கவும். அப்படி ஜெபித்துவந்தால் 41-நாள் கட்டாயம் கடாக்ஷதரிசன சித்தியாகும்.

சித்தியானபிறகு இந்த மந்திரத்தினாலும், எந்திரத்தினாலும் ஜனங்களுக்கு எந்தபீடை வந்தாலும், கர்மத்தோடு சேர்ந்தகஷ்டங்களுக்கும், குழந்தைகளின் பீடைகள், தேகம்சௌக்கியமா யிருக்கவும், விபூதியாலும், பழம் மந்திரித்தாவது, இளநீர் மந்திரித்தாவது, நூல் சரடு மந்திரித்தாவது ஜலம் மந்திரித்தாவது, தேள், நட்டுவாக்கடி, பூனைகடி, நாய்கடி, எலிகடி முதலிய விஷங்களுக்கும் மேல்சொல்லிய பிரகாரம் ஜெபம் செய்து குடுத்தால் சீக்கிரம் சித்தியாகும். முன்பெரியோர்கள் அனுஷ்டித்து ஸ்ரீ முருகக்கடவுள் அனுக்கிரகம் பெற்றுள்ளார்.

## மூலமந்திரம்.

ஔவும், சௌவும், ஓம் ரீயும்,
ஐயும், கிலியும், ஸ்ரீயும், ஓம், சரவண
பவா நம, அரஹரா
சிவசுப்பிரமணிய தேவா
என்று 1008 - உரு வீதம்
காலை மாலை ஜெபிக்கவும்.

ஓம்

ஸ்ரீகுகாய நம:

# மூலவசீகரம்

ஓங்காரமூலத்தி லுட்பொருளாய் நின்றிடு
முண்மையே யிங்குவருக
உத்தமி சத்தியருள் பாலனே வேலனே
ஓம் பிராணமூள அய்யனே
ஆங்கார அச்சரத்தோரே யெழுத்ததி
லமைந்தவா வருக வருக
அரிபஞ்ச ரூபனே ஆனந்த மயமான
ஆதியே வருக வருக
ரீங்கார பீடத்தில் வட்ட மவுனத்திலே
நின்றிலங்கிய கந்தனே
நீயெங்கும் நானெங்கு மங்கங்கு மெங்குமே
நிறைந்தவா வருக வருக
தீங்குகள் வாராமல் முன்னின்று காத்தருள்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீ ஓம் சரவண பவசம ஹரஹரா
சிவ சுப்ரமண்யதேவே.

நவசித்தர் பரவிய பாதாவிநோதனே
நாதனே போதனே வா
நவகோண வட்டத்து ளாடும்பராபர
நற்கருணை மூர்த்தியே வா
தவமேவு தென்பொதிகை முனிவன் மனத்திலுறை
சகல கலைக்கியானனே வா
சத்துரு சங்காரருத்ரா வீரபத்திரா
சாமியென் சாமி வாவா
பவ சரவணபவா அரிஅரி அரஅர
பவனொளியின்மணி நீ வாவா
பரிபூர்ண மலரடித் தெரிசனை யறியநான்
பணிய அருள்புரிய வாவா
சிவசிவா வந்தெனது முன்னின்று காத்தருள்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநம ஹரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 32

நெஞ்சகந்தன்னில் நிறைந்தருள்செய் காரணா
நித்தியா பரிபூரணா
நிஷ்களா சச்சிதாநந்தனே யெங்கும்
நிராமயம தான கனியே
அஞ்சல்புரி சேகரா ஆறுமுக நாதனே
யடியாரை யாளவந்த
ஐயனே மெய்யனே துய்யனே கருணைமுத்
தையனே யிங்குவருக

தஞ்சமென் றுனதுசீர் பாதமேகெதியென்று
தமியே னினைத்தபடியே
தான்முடித் திடவுநா னுனையேதுதித்திடவுந்
தயவுகூர்ந் தன்புவந்து
செஞ்சதங்கைகொஞ்ச வரவுமிதுசமையமே
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநமா ஹரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 33

வீரனே சூரனே சங்கார கர்த்தனே
வேலனே செயமங்களம்
வமலனருள் புதல்வனே சரவணப் பொய்கைவளர்
மெய்யனே சிவ மங்களம்
வாரணிதனத்தழகு வள்ளிதெய்வானைமண
வாளனே செயமங்களம்
வரிசைபெறு நவவீரவாகுவர்கள் மீதுமண
வாளனே செயமங்களம்
கோரசங்காரனே தீரகெம்பீரனே
குருபரா செயமங்களம்
கோலாகலாவதிக லீலாவிநோதனே
குமரனே செயமங்களம்
தீரவுதாரவொய்யாரமென மங்களம்
செந்தி லம்பதி நாயகா
ஸ்ரீஓம் சரவண பவநமா ஹரஹரா
சிவ சுப்ரமண்ய தேவே. 34


ஓம் சேம்
கணி
இங்
உங்
அங்
எங்
வ
ப
சௌவும்
அவ்வும்
றீயும்
ச

ஸ்ரீ

சண்முகாய நம:

# முகவசீகரமும், பலவித சங்கதிகளுக்கும், சபையில் நடக்கும் வைபவங்களுக்கும், விநோதங்களுக்கும், சகல வசியத்திற்கும், சித்திபெறச் செய்வதற்கு பூசை செய்யவேண்டிய விதி.

இந்த சக்கரத்தை பஞ்சவிரல் சமசதுரமாக தங்கத்தினால் தகடு அடித்து அதில் இந்த யந்திரத்தை வரைந்துகொண்டு அதிலுள்ள பீஜாக்ஷர-பிராணயாக்ஷரம் யந்திர எழுத்துகள் ஒன்றும் பிசகாமல் அடைத்துக்கொண்டு ஒரு இடம் சுத்திசெய்து சாணத்தால் மெழுகி பஞ்சகோலம் போட்டு அதை சுத்தி தாமரை இதழ்போட்டு கோலத்திற்கு மத்தியில் வெள்ளி தாம்பாளத்தில் நிரமுள்ள விபூதிபரப்பி அதற்கு குங்குமபொட்டு யிட்டு அக்குங்குமம் மத்தியில் ஷ தகடு வைத்து தகட்டுக்கு முன்னே விளக்கு தீபம்வைத்து புஷ்பம்சார்த்தி, குங்குமம் பொட்டுக்கும், தீபத்திற்கும் வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் 2-இரண்டு பலகைபீடம் போட்டு பட்டு வஸ்திரம் சார்த்தி அவ்வஸ்திரத்திற்குமேல் 2-இரண்டு கண்ணாடி பதிந்து

கண்ணாடி கீழ்பக்கத்தில் 2-இரண்டு எலுமிச்சம்பழம் வைத்து வெத்திலைபாக்கு வைத்து புஷ்பம் சார்த்திக்கொண்டு அதற்கு கீழ்பக்கத்தில் நுனி வாழையிலை போட்டு தேங்காய், பழம், சர்க்கரை, அவல், கடலை, பால், பஞ்சாமிர்தம், பொங்கல், பாயாசம்,, பழவர்க்கங்கள் வைத்து கற்பூரம், சாம்பிராணி, சந்தனம் பன்னீர், ஊதுவத்தி, குங்குமம் இதுகளை வைத்து தான் சுசியாய் ஸ்நானம் செய்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்துக் கொண்டு பட்டுவஸ்திரம் தரித்து ஆசன பீடத்தில் அக்கினி திசையை நோக்கி உட்கார்ந்து நாவிமணி தாவடத்தால் பூஜை செய்து ஜெபிக்கவும். பூஜை ஆரம்பத்தில் யந்திரத்திற்கும், தகடுக்கும், ஜலகந்த-புஷ்ப-தீப-தூப நைவேத்தியம் கொடுத்து கற்பூரதீபம் காட்டிக்கொண்டு மேற்சொல்லிய 4-தியான சுலோகங்களை 5-அல்லது 7-அல்லது 9-தடவை பாராயணம் செய்துக்கொண்டு கீழ்சொல்லிய மூலமந்திரத்தை நாள் 1-க்கு 1008-உரு விதம் 41-நாள் ஜெபிக்கவும். சகலகாரியமும் சித்தியாகும்.

சித்தியானபிறகு குளிச்சத்தினாலாவது, யந்திரத்தினாலாவது, நூல் சரடு கயருகளினாலாவது, குங்குமத்தினாலாவது தியானம்செய்து கொடுக்க முகவசிகரமும், பலவித சங்கதிகளுக்கும், சபையில் நடக்கும் வைபவங்களுக்கும், விநோதங்களுக்கும், சகல வசியத்திற்கும் குடுக்க சித்தியாகும். முருகக்கடவுள் அனுக்கிரகத்தினால் "சித்திபெற்ற" முனிவர்களின செய்முறை தவராமல் நடக்கும்.

## மூலமந்திரம்.

**சௌவும், ஓம், ரீயும், ஐயும், கிலியும்,
ஔவும், ஸ்ரீயும், ஓம், சரவணபவா
நம அரஹரா சிவ சுப்பிரமண்ய
தேவா என்று நாள் 1-க்கு
1008-உரு ஜெபிக்கவும்.**

சிவசுப்பிரமணியர் ஷடாக்ஷரமாலை,
மந்திர யந்திர பூஜாவிதியுடன்
முற்றுப்பெற்றது.



ஸ்ரீ
கடவுள் துணை.

முன்னோர்கள் கையாண்டு பூசைசெய்து
சகலகாரியங்களும் சித்திபெற்று அனுக்கிரகம் பெற்றுள்ள
வாலை தியானம் என்னும்

# பெரிய வாராகி மாலை

மூல மந்திர,யந்திர பூஜாவிதியுடன்
இதில் பஞ்சரத்தின வாராகிமாலையும்,
நவரத்தின வாராகிமாலையும் சேர்ந்திருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணா 0—4—0

அன்பர்காள்! இந்த பெரிய வாராகிமாலை என்னும் புத்தகத்தை மூலமந்திர பூஜாவிதியுடன் பழைய ஏட்டுப்பிரதிகளினின்று அச்சிட்டிருக்கிறோம். இதை ஒவ்வொருவரும் வாங்கி அதன்படி பூஜைசெய்து அவாளவாள் கோரிய காரியங்களை தேவியின் அனுக்கிரகத்தினால் சித்திபெறலாம் இதே பிரகாரம் முன்னோர்களாகிய தவமுனிகள் முதலானோரும் பூசைசெய்து அவர்கள் நினைத்தகாரியம் சித்திபெற்றார் என்பதை இப்புத்தகத்தாலும், அதன்படி நடத்திபார்க்க நன்கு விளங்கும்.

புத்தகத்திற்கு முந்துங்கள்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

நீங்கள் தினம் 2-ரூபாய் முதல் 5-ரூபாய் வரையிலும் சம்பாதிக்க வேண்டுமானல்

# கைத்தொழில் ஜீவிய போதினி

என்னும் புத்தகத்தை வாங்கி பாருங்கள்.

இதன் விலை அணு—4.

வேண்டுவோர் 4½ அணு தபால் பிள்ளைகள் அனுப்பினல் ஓர் புத்தகம் அனுப்பப்படும்.

---

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டிய பொக்கிஷம்

மாமிகளின் கொடுமை! மருமக்கமாரின் துயரம்

மருமக்கமாரின் கொண்டாட்டம்! மாமிகளின் திண்டாட்டம்!

மங்களபூஷணம் அல்லது மதிபூஷணம்

350 பக்கம் கொண்ட புத்தகம் விலை ரூபா 1—4—0

விலாசம்:—

முராஹரி அச்சுக்கூடம்

நெ. 20 நம்மாள்வார் தெருவு முதல் சந்து, சென்னை.